**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 261/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W–3 |
| Name | : | கனகசுந்தரம், வயது 50 |
| Father Name/Husband Name | : | தபசு |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of October 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 05.04.2022 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது கோவில்பட்டி இலுப்பையூரணி, செண்பகா நகரை சேர்ந்த முத்துப்பாண்டி மகன் ஜெயபால் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவைப் பெற்று மனுவின் தன்மை ஏற்ப நிலைய குற்ற எண். 196/2022 பிரிவுகள் 379 இதச வாக வழக்கு பதிவு செய்தேன்.
2. என்னிடம் காட்டப்படும்முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தது தான். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். வழக்கு பற்றி விசாரணைஅதிகாரி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. அ.சா.ஆ.1 புகாரில் வண்டியை அடையாளம் தெரியாத நபர்கள் எடுத்துச்சென்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் மர்ம நபர்கள் திருடிச்சென்றதாக சொல்லியுள்ளார். அ.சா.2 தகவல் கொடுத்தன் பேரில் தான் அ.சா.1ற்கு வண்டி காணாமல் போனது பற்றி தெரியவந்ததாக சொல்லியுள்ளார் என்றால் இல்லை.

2. காவல்நிலையத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு வர அதிகபட்சம் 15 நிமிடங்கள் ஆகும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 05.04.2022 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கை அன்றைய தினம் மாலை 04.45 மணிக்கு நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது என்றால் சரிதான்.
3. மேற்படி காலதாமதத்திற்கான காரணத்தை விசாரணை அதிகாரியிடம் சொன்னீர்களா என்றால் இல்லை. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 எந்த புகார்மனுவும்கொடுக்கவில்லை என்றாலும் அ.சா.ஆ.1 புகார் மனு வழக்கிற்காக பின்யோசனை செய்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும்சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.